பக்கங்கள் 13 + 06

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

### ஐ.தே.கவை கைவிட்டு

## மொட்டுவில் இணையுமாறு ரணிலுக்குச் சாகர அழைப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில்

04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 20 புதன்கிழமை 03.07.2024 அதிர்வு 338



# நாளை யாழ். வருகின்றது சம்பந்தனின் புகழுடல்!

### நாடாளுமன்றில் இன்று பலரும் அஞ்சலி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் நாளை கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றது.

யாழ். தந்தை செல்வா கலையரங்கில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை அன்னாரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. அதன்பின்னர் அன்னாரின் புகழுடல் விமானம் மூலம் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது.

04▶

# பற்றி எரிந்தது லயன் குடியிருப்பு! தம்பதியினர் உடல் கருகி மரணம்!!

கேகாலை மாவட்டத்துக்குட்பட்ட எட்டியாந்தோட்டை, பனாவத்த தோட்டம் இலக்கம் – 02 பிரிவில் உள்ள லயன் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

இன்று அதிகாலை ஒரு மணியளவிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

60 வயதான கணவரும், 50 வயதான மனைவியுமே தீ விபத்தில் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

அத்துடன், லயன் குடியிருப்பில் உள்ள 5 வீடுகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.





# கொழும்பில் 67 ஆவது மாடியில் இருந்து குதித்து 15 வயது மாணவனும், மாணவியும் உயிர்மாய்ப்பு

**கொழும்பு - கொம்பனி வீதியில் உள்ள பிரபல அடுக்குமாடி குடியிருப்பில் 67 ஆவது மாடியில் இருந்து 15 வயதான இரண்டு மாணவர்கள் கீழே குதித்து தற்கொலை செய்து கொண் டனர்.**

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. சர்வதேச பாடசாலை யொன்றில் ஒரே வகுப்பில் கல்வி கற்கும் மாணவனும், மாணவியுமே உயிர்மாய்த் தனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

வெள்ளவத்தை மற்றும் களனி பிர தேசத்தைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு உயிரிழந்தனர் என்றும் பொலி ஸார் தெரிவித்தனர்.

பாடசாலை நேரம் முடிந்ததும் குறித்த கட்டடத்தில் நடைபெற்ற விருந்தில் இருவரும் கலந்துகொண்டனர் என்றும், இந்த விருந்தில் சுமார் 100 மாணவர்கள் கலந்துகொண்டனர் என்றும், அதன் பின்னர் மேற்படி இரு மாணவர்களும் 67 ஆவது மாடியில் இருந்து குதித்தனர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

3 ஆவது மாடியில் மேல் தளத்தில் இருந்து அவர்களின் சடலங்கள் கண்டுப் பிடிக்கப்பட்டன என்றும், அவர்களின் காலணிகள் 67 ஆவது மாடியில் இருந்து மீட்கப்பட்டன என்றும் பொலி ஸார் கூறினர்.

நீதிவானின் கள விசாரணையை யடுத்து சடலங்கள் பிரேத பரிசோத னைக்காகக் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.

மேற்படி மாணவனும், மாணவியும் தற்கொலை செய்தமைக்கான காரணம் இன்னமும் தெரியவரவில்லை.

# வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு சீன அரசின் அரிசிப் பொதிகள்!

## சுமார் 17 ஆயிரம் பொதிகள் வந்து சேரவுள்ளன

**(ந.லோகதயாளன்)**

சீன அரசின் அரிசி வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு விநியோகம் செய்யும் வகையில் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கான சீனாவின் அடுத்த கட்ட உதவியே இந்த அரசி விநியோகம் எனப்படுகின்றது.

இந்த விநியோகத்துக்காக 10 கிலோ எடை கொண்ட பொதிகளில் யாழ்ப் பாணம் மாவட்டத்துக்கு 7 ஆயிரத்து 946 பொதிகளும், மன்னார் மாவட டத்துக்கு 5 ஆயிரத்து 604 பொதிகளும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஆயிரத்து 320 பொதிகளும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரத்து 940 பொதி களும் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட பின்னர் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களங்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும் எனக் கூறப்பட்டது. இதேநேரம் கிழக்கு மாகாணத்துக்கும் இந்தப் பொதிகள் எடுத்துச் செல்லப் பட்டவுள்ளன.

இம்முறை அரிசிப் பொதிகள் ஒவ் வொன்றும் 50 கிலோ எடை மூடை களாகவே காணப்படுவதனால் அவற்றை சிறு பொதிகளாக்கி வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக் கின்றனர்.

இந்த அரிசிப் பொதிகள் விரைவில் கடற்றொழில் அமைச்சர் மற்றும் சீனப் பிரதிநிதிகளால் வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது.

# டயகம ஈஸ்ட் தோட்ட பிரதான வீதியை திருத்துமாறு கோரி இன்று ஆர்ப்பாட்டம்






**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

நுவரெலியா டயகம நகரத்தில் இருந்து டயகம ஈஸ்ட் தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதி கடந்த 30 வருட காலமாகப் புனரமைக்காத காரணத்தால் 6 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பாதையை புனரமைக்க கோரி இன்று (03) 300 இற்கு மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். ஆர்பாட்டம் டயகம ஈஸ்ட் பிரதான வீதியில் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி, பாதையை உடனடியாகத் திருத்தித் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

தேர்தல் காலங்களில் வாக்குறுதி வழங்கிய அரசியல்வாதிகள் இதுவரை இதற்கு எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

2023 ஆம் ஆண்டு புனரமைப்புச்செய்து தருவதாக கூறி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடாக அடிக்கல் நடப்பட்டது.

எனினும் இதுவரை எவ்வித அபிவிருத்தியும் முன்னெடுக்கவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பாதை குன்றும் குழியுமாக காணப்படுவதால் பாடசாலை செல்லும் மாணவர்கள்,தொழிலுக்குசெல்பவர்கள்,நோயாளர்கள் என பலரும் பல்வேறு துயரங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாதையின் ஊடாக தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் பாதை சீர்கேட்டின் காரணமாக முறையான போக்குவரத்து இடம்பெறவில்லை என்று தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்பதாக இப்போதையை அரசியல்வாதிகள் வீதியைத் திருத்திக் கொடுத்தால் மாத்திரமே தாங்கள் வாக்களிப்போம் என தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் இருந்து கலைந்து சென்றனர்.







# யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிரந்தர பதில் அரச அதிபர்கள் இன்று நியமனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிரந்தர பதில் அரச அதிபர்கள் இன்று பிரதமரால் நியமிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ம. பிரதீபனும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு எஸ்.முரளீதரனுமே இவ்வாறு நிரந்தர பதில் அரச அதிபர்களாக நியமிக்கப்பட்டனர்.

மாவட்டங்களின் அரச அதிபர்கள் ஓய்வுபெற்றுச் சென்ற பின்னர் கடமை நிறைவேற்று அரச அதிபர்களாக பணியாற்றிய இருவருமே இவ்வாறு இன்று பிரதமர் தினேஷ் குணவர்தனாவால் நிரந்தர பதில் அரச அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் செயலகத்தில் இன்று காலை 10 மணியளவில் இடம்பெற்ற நிகழ்விலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





### நாளை...

இதேவேளை, சம்பந்தனின் புகழுடல் நேற்றுக் காலை முதல் இன்று மதியம் வரை பொரளை ஏ.எப். றேமண்ட்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பிற்பகல் 2.30 மணியிலிருந்து மாலை 4 மணி வரை நாடாளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அன்னாரது புகழுடலுக்கு நேற்று முதல் இன்று வரை ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, சம்பந்தன் படித்த பாடசாலைகளில் ஒன்றான யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினர் அன்னாரின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை வரை திருகோணமலையில் அன்னாரது இல்லத்தில் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை 4 மணியளவில் அன்னாரது புகழுடல் தகனக்கிரியைக்காகத் திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

### மொட்டுவில்...

அங்கம் வகிப்பாராயின் அவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது குறித்து பரிசீலிக்கலாம் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாங்கள் குறிப்பிட்ட ஒருவரை முன்வைக்கவில்லை. எந்த நேரத்திலும் சரியான நபரை முன்வைப்போம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவர் மொட்டுச் சின்னத்தில் முன்வைக்கப்படுவார். ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி எமது கட்சியின் உறுப்பினர் பதவியைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நடந்தால் அவரை வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் நாங்கள் பரிசீலிப்போம்.” – என்றார்.

# குளவி கொட்டி 8 தொழிலாளர்கள் பாதிப்பு





(எஸ்.சதீஸ்)

பொகவந்தலாவை, கெர்க்கஸ் வோல்ட் மேல் பிரிவு தோட்டப் பகுதியில் 8 ஆண் தோட்டத் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குளவிக்கொட்டுக்கு இலக்காகிய தொழிலாளர்கள், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என்று வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்பு!



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மனையாவெளி பிரதேசத்தில் ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று (02) பிற்பகல் அந்த நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் மாதுமை அம்பாள் வித்தியாலய ஆசிரியரான தமிழ்வேந்தன் (வயது 52) என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அந்த நபர் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் மேலதிக விசாரணைகளை துறைமுகபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தடுப்போம் தற்கொலைகளை!

இலங்கையில் வருடாந்தம் மூவாயிரம் மனித உயிர்கள் தவறான சுயமுடிவில் பறிக்கப்படுகின்றன என்ற புள்ளிவிவரத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

அதாவது நாளொன்றுக்கு சாரா சரியாக 9 பேர் தற்கொலை செய்கின்றார்கள். தற்கொலை செய்பவர்களில் ஆண்களே அதிகமானோர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் 4 மணித்தியாலத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர் எனப் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் 40 வீதமானோர் கல்வி கற்றவர்கள் எனவும் அவர்களுள் கணிசமானோர் - 22 வீதத்தினர் - பட்டப் படிப்பை முடித்தவர்கள் எனவும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

இப்படிக் கடந்த வருடத்திற்கு முதல் வருடம் மாத்திரம் 3,406 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அவர்களில் 83 வீதமானவர்கள் ஆண்கள். 35 வீதமானவர்கள் வேலையில்லாதவர்கள்.

1990ஆம் ஆண்டளவில் இலங்கை உலகில் அதிக தற்கொலைகள் கொண்ட நாடுகளில் ஒன்றாக விளங்கியது. இப்போது அந்த அவப் பெயரிலிருந்து அது தன்னை விடுவித்துக் கொண்டாலும்,இப்போது மீண்டும் தற்கொலைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன எனப் புள்ளிவிவரங்கள் எச்சரிக்கை மணி ஒலிக்கின்றன.

நாட்டில் பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொள்வோர் தொடர்பான செய்திகள் அண்மை நாள்களில் அதிகளவில் பதிவாகி வருகின்றன.

தற்கொலைகள் ஒரு குறிப்பிடத்தக்க பொதுச் சுகாதார சவாலாக மாறியிருப்பதாகக் கருதும் சுகாதார அதிகாரிகள், இந்த ஆபத்தான போக்கை எதிர்த்துப் போராடுவதற்கு, மேம்பட்ட மனநல ஆதரவு சேவைகள், சமூக விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் பயனுள்ள தற்கொலைத் தடுப்பு உத்திகள் ஆகியவற்றின் அவசரத் தேவையை வலியுறுத்தியுள்ளனர்.

இந்தப் பின்புலத்தில் சுகாதார அமைச்சின் உளவள ஆற்றல் சேவைகள், குறிப்பாக நாடு தழுவியதாக அரசு வைத்தியசாலைகளில் இளைஞர், யுவதிகளைகளை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் வழியாக மன அழுத்தத்தை கையாளுதல், சாதகமாக சிந்தித்தல், இளைஞர்களின் ஆற்றலை கட்டியெழுப்புதல், சுயநம்பிக்கையை வளர்த்தல் போன்றவற்றை எட்ட முடியும் என்று சுகாதார அமைச்சு எதிர்பார்க்கின்றது.

ஆயினும் இவ்விடயத்தில் பாதிக்கப்படக் கூடிய நபர்களை முற்கூட்டியே அடையாளம் கண்டால் மட்டுமே அது தொடர்பான ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்துத் தவறான முடிவெடுக்காமல் அவர்களைக் காப்பாற்ற முடியும்.

அப்படி முன்கூட்டி அடையாளம் காண்பதுதான் சவாலுக்குரிய விவகாரமாக இருந்து வருகின்றது. சமூகம் எவ்வளவு உஷாராக இருந்தாலும் - விழிப்புணர்வாகச் செயற்பட்டாலும் - இப்படித் தவறாக முடிவெடுப்போரை முற்கூட்டியே அடையாளம் காணமுடியாமல் போய் விடுவதாக மன ஆற்றுப்படுத்துகைப் பணியுடன் தொடர்புடைய வளவாளர் ஒருவர் கூறினார்.

கோபம் மற்றும் முரண்பாடுகளை கட்டுப்படுத்தும் தன்மை மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். மது பாவனை மற்றும் உள ரீதியான பிரச்சினைகள் உள்ளவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குதல் மூலம் இதனை கட்டுப்படுத்த முடியும் என உள நல மருத்துவர்கள் கூறுகின்றனர்.

தற்கொலை முடிவுக்கு ஒருவர் செல்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே அதிகளவிலான தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று சம்பந்தப்பட்ட மருத்துவ தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

சோகம், ஏமாற்றம், ஆதங்கம், பொறாமை, தோல்வி போன்றவற்றால் ஏற்படும் மன உளைச்சல்களும், பொறுப்பேற்க - பொறுப்புக் கூற - திராணியற்ற நிலைமையும் நன்கு கற்றறிந்தவர்களையும் கூட இத்திசையில் நெட்டித் தள்ளிவிடுகின்றன என்பதுதான் இதில் புதைந்து கிடக்கும் துன்பியல் உண்மையாகும்.



# சம்பந்தன் ஐயாவின் மறைவுக்கு சர்வமதத் தலைவர்கள் அஞ்சலி!

இலங்கை நாட்டில் பிரிவினை வாதம் இல்லாமல் ஒரு தாய் மக்களாக தந்தம் இனத்தின் அடையாளங்களுடன் சுதந்திரமாக வாழ வேண்டும்.

அதே வேளையில் இலங்கை நாட்டின் தேசிய கொடியின் கீழ் அனைவரும் ஒரு தாய் மக்களாக ஒன்றாக வாழ வேண்டும் என்ற உணர்வை கொண்டவர் அமரர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஆவார்.

சம்பந்தன் ஐயாவின் மறைவை முன்னிட்டு சர்வமத தலைவர்கள் இணைந்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வமத தலைவர்களான வணக்கத்துக்குரிய கலஹம தம்மரன்சி தேரர், சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா, அல் செய்க் ஹசன் மௌலானா, அருட்தந்தை நிஷான்குரே ஆகியோர் கூட்டாக இணைந்து இந்த அனுதாபச் செய்தியை தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

இக்கட்டான அரசியல் சூழலில் தளராமல் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வந்தவர் சம்பந்தன். அதே வேளை எதிர்கட்சித் தலைவராகவும் நல்லாட்சி அரசில் இருந்து அனைத்து மக்களின் கருத்துகளையும் உள்வாங்கி அரசியல் சாணக்கியமாக செயற்பட்டவர்.

இலங்கை நாட்டினுடைய அனைத்து அரசியல்வாதிகளாலும் மதிக்கப்படும் பெருந்தலைவராக வாழ்ந்தவர்.

அன்னாரின் மறைவுக்கு அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.– என்றுள்ளது.

# உலகத் தலைவர்கள் மத்தியில் ஆதரவு பெற்ற தலைவர் சம்பந்தன்

## தமிழர் சமூக ஜனநாயக கட்சி இரங்கல்

இராசவரோதயம் சம்பந்தன் ஐயா இலங்கையின் அனைத்து சமூக அரசியல் தலைவர்களுடனும் பரவலாக நல்லுறவைப் கொண்டிருந்தவர். யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் உலகத் தலைவர்கள் ராஜதந்திர மட்டங்களில் நன்கு அறியப்பட்ட தலைவர். தமிழ் மக்களின் ஆதரவும் பரவலாக காணப்பட்டது.

செல்வா , அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்கள் உலகளாவிய அளவில் அறியப்பட்டதை விட சம்பந்தர் அவரது காலத்தில் அறியப்பட்டவர். இலங்கையின் வேறெந்தத் தலைவரும் இவ்வாறு அறியப்பட்டிருக்கவில்லை.

மிதவாத தலைவர் என்ற விம்பம் உலகளாவிய முக்கியத்துவத்தை அவருக்களித்தது.

இவ்வாறு தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைமை ஆலோசகர் சு.கு.ஸ்ரீதரன் வெளியிட்டுள்ள அஞ்சலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சகல இன சமூகங்களுடைய சமாதானத்தை கொண்டு வருவதற்கான பிரம்மாண்டமான வாய்ப்புகள் சம்பந்தர் முன்னால் இருந்தன. இலங்கையின் சகல சமூகங்களின் ஒத்துழைப்புடன் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் சாதிக்கும் வாய்ப்புகள் இருந்தன. சம்பந்தர் இதனை முன்னின்று சாதித்திருக்க முடியும். சாதித்திருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது நிகழவில்லை.

அரசியல் தீண்டாமை – கட்சி – கதிரை – கோஷ்டி சண்டைகளால் இழக்கப்பட்ட வீணடிக்கப்பட்ட காலம்.

இனி வரும் காலத்திலாவது இந்த இழந்த சந்தர்ப்பத்தை வரலாற்றுத் தவறை உணர்ந்து தீண்டாமை பாராட்டாத வேற்றுமையில் ஒற்றுமை கண்டு செயல்படும் காலம் வருமா?

அன்னாரின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல்கள். அஞ்சலிகள்.– என்றுள் ளது.

# சிறுபான்மை மக்களுக்காகக் குரல் கொடுத்த தலைவரை நாம் இன்று இழந்து நிற்கிறோம்

## இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் அனுதாபம்

இன, மத வேறுபாடுகளுக்கப்பால் இன நல்லிணக்கத்துக்காக நாட்டு மக்களின் நன்மை கருதிச் செயற்பட்ட ஒரு தலைவராகவும், சிறுபான்மை மக்களுக்கு குரல் கொடுக்கும் ஒரு வீரத் தளபதியாவும் திகழ்ந்த ஒருவரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம் என்று இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ. பி. கமாலத்தீன் தெரிவித்துள்ளார்.


தமிழ் தேசிய கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 14 ஆவது எதிர்க்கட்சித் தலைவருமான சட்டத்தரணி இரா. சம்பந்தன் ஐயாவின் மறைவை முன்னிட்டு விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் தமிழ் மக்களின் உரிமைக் குரலாகவும், இலங்கை நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட ஒரு தலைவராக சம்பந்தன் ஐயா காணப்பட்டார்.

அன்னாரின் பிரிவால் மீள துயரில் இருக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

# சம்பந்தனின் நினைவேந்தல் வடமராட்சியில்!











பெருந்தலைவர் சம்பந்தன் ஐயாவின் நினைவேந்தல் நிகழ்வு இலங்கை தமிழரசு கட்சியின் வடமராட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான சந்திரலிங்கம் சுகிர்தன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கை தமிழரசு கட்சியின் வடமராட்சி உறுப்பினர்கள் உட்பட பலரும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள்.

இதேவேளை, இலங்கை தமிழரசு கட்சியின் கொடி துக்கத்தை அனுஸ்டிக்கும் முகமாக அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

# மக்களையும், நாட்டையும் அந்நியர்களுக்கு விலைபோகாமல் பாதுகாத்தவர் சம்பந்தன் ஐயா!

## கலீலுர்ரஹ்மான் அனுதாபம் தெரிவிப்பு

தமிழ் தேசிய அரசியலை பல்வேறு வகையான கெடுபிடிகளுக்குள்ளிருந்து பாதுகாத்துத் தனது மக்களின் பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்திய மிகச்சிறந்த நல்லிணக்க எண்ணம் கொண்ட மூத்த அரசியல்வாதியும், தமிழ் தலைவருமான திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஐயாவுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்து கொள்கிறேன் என்று கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு பொருளாளர் ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிறுபான்மைச் சமூகங்களை சம பார்வையுடன் நோக்கிய சம்பந்தன் ஐயா நீண்ட அரசியல் வரலாற்றை கொண்ட மூத்த தலைவர் என்பதையும் தாண்டி நாட்டுப்பற்றும் இனப்பற்றும் சமனாக கொண்ட அரசியலில் முதிர்ச்சியடைந்த தலைவராக விளங்கியவர். நாடும், நாட்டு மக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிய உள்நாட்டு யுத்த காலத்திலும் ஜனநாயகத்தின் மீது அவருக்கிருந்த நம்பிக்கையால், எவற்றுக்கும் சோரம் போகாமல், விலை போகாமல் இருந்த ஒரு ஜனநாயகவாதி அவர்.

தொண்ணூறு வயதைக் கடந்திருந்தாலும் தமது மக்களுக்கு தீர்வைப் பெற வேண்டும் என்ற திடகாத்திரம் அவருக்கிருந்தது.

சிறுபான்மைச் சமூகங்களை, சம பார்வையில் நோக்கிய இவரின் இழப்பு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பேரிழப்பாகும். சமூக நல்லிணக்கத்தை விரும்பிய அவர் முஸ்லிம் தலைமைகளுடன் நல்லுறவைப் பேணி வந்தார்.

இன்று வரைக்கும் தீர்க்கப்படாதுள்ள தமிழ், முஸ்லிம் அபிப்பிராய பேதங்களைப் போக்குவதற்கு சம்பந்தன் போன்ற நல்லிணக்க தலைமைகளே இலங்கைக்கு அவசியம் என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். அன்னாரின் இழப்பால் துயருறும் சகலருக்கும் எனது ஆறுதல்களை தெரிவித்து கொள்கிறேன்.-என்றுள்ளது.

# ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காக இறுதி மூச்சுவரை குரல் கொடுத்தவர்!

## சம்பந்தனின் மறைவுக்கு விடுதலைச் சிறுத்தைகள் திருமாவளவன் இரங்கல்!!

ஈழத் தமிழர்களின் முதுபெரும் தலைவர் இரா.சம்பந்தனின் மறைவு அதிர்ச்சி அளிக்கிறது. 1956 ஆம் ஆண்டு தனது 23 ஆவது வயதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து, தனது 91 ஆவது வயது வரை ஓய்வு ஒழிவின்றித் தமிழர் நலன்களுக்காகப் பாடுபட்டவர். அவரது மறைவு தமிழ்த் தேசிய அரசியலில் இட்டு நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அவருக்கு எமது அஞ்சலியையும் அவரை இழந்து வாடும் தமிழ் மக்களுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுதந்திரத்துக்குப் பின்னரான ஈழத் தமிழரின் அரசியல் வரலாற்றில் பிரிக்க முடியாத ஒரு ஆளுமையாக ஐயா இரா. சம்பந்தன் இருந்தார். ஈழத்தமிழர் சிக்கலுக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோடு அதில் உறுதியாகவும் இருந்தார்.



1983 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் படி தனி நாடு கோருவதற்கு ஆதரவளிக்கமுடியாது எனநாடாளுமன்றத்தில் உறுதிமொழி ஏற்கும் படியான நிலைபாட்டை எதிர்த்து, சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக, அவ்வாறு உறுதிமொழி ஏற்க மறுத்தும் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டத் தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டதற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தனர்.

அதனால் அப்போது இரா.சம்பந்தன் உள்ளிட்டோர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈபிஆர்எல்எப், ரெலோ உள்ளிட்ட சில கட்சிகள் இணைந்து 2001 ஆம் ஆண்டு “தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு” என்ற ஒரு புதிய கூட்டணி உருவாக்கப்பட்டது. அந்தக் கூட்டமைப்புக்கு இரா.சம்பந்தன் தலைவராகப் பொறுப்பேற்றார். 2001 ஆம் ஆண்டு நடைபெற்றத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானார். ஆறு முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் 2015ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார்.

ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக இலங்கையில் மட்டுமின்றி, சர்வதேச அளவில் பல்வேறு தலைவர்களைச் சந்தித்து அழுத்தங்களைக் கொடுப்பதிலும், தமிழர்நலன்களுக்கு ஆதரவுதிரட்டுவதிலும் அவர் சோர்ந்ததே இல்லை.

அரசியல் ரீதியாக எத்தனையோ விமர்சனங்களை அவர்மீது மிகவும் கடுமையாக முன்வைப்பவர்களும்கூட, ஈழத் தமிழரின் இனச் சிக்கலை அவரளவுக்கு ஆழமாகப் புரிந்துகொண்ட, அவரைப்போல செறிவாக எடுத்துக் கூறும் ஆற்றல் கொண்ட ஒரு தலைவர் இன்று ஈழத்தில் இல்லை என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

அவரது மறைவு எவ்வளவு பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு இதுவே சான்றாகும். ஈழத் தந்தை செல்வாவின் வழியில் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மூலம், ஈழச் சிக்கலுக்குத் தீர்வுகாணப் போராடிய பெரியவர் இரா. சம்பந்தன் ஐயாவுக்கு எமது வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம்.- என்றுள்ளது.

# சம்பந்தன் ஐயாவின் மறைவு தமிழருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி முஸ்லிம் பேரவை இரங்கல்

சம்பந்தன் ஐயாவின் மறைவு இலங்கை தமிழ் பேசும் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பு என்று யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களின் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி முஸ்லிம் பேரவைச் செயலாளர் என்.எம். அப்துல்லாஹ் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கை தமிழ் - முஸ்லிம் உறவின் இணைப்புக்கான அடையாளமும், இலங்கையின் சிரேஷ்ட அரசியல் ஆளுமையுமாகிய இலங்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தனின் மறைவு இலங்கை அரசியல் பரப்பிலும், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் ஈடுசெய்யப்பட முடியாத வெற்றிடத்தையும், இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அன்னார் காலமான செய்தி யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

சம்மந்தன் ஐயா தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் மக்களின் நிரந்தரத் அரசியல் தீர்வுக்கான அனைத்து மட்டத்திலான நீண்டகால அரசியல் முன்னெடுப்புக்களிலும் இலங்கை முஸ்லிம் மக்களையும் இணைத்து தமிழ்பேசும் மக்களாக ஒன்றிணைத்து முன்னெடுத்திருந்தமையே அவரது தலைமைத்துவம் மற்றும் ஆளுமையை வெளிக்காட்டுகின்றது.

கட்சி அரசியலுக்கு அப்பால் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்லும் அவரது பண்பே அரசியலில் அவரை மாபெரும் இடத்துக்குக் கொண்டு சென்றது எனலாம்.

அரசியலில் ஜனநாயகம், சமாதானம், ஐக்கியம் உள்ளிட்டவற்றை ஒவ்வொரு தருணங்களிலும் தொடர்ச்சியாக வலியுறுத்தி அதன் அடிப்படையிலேயே செயற்பட்டிருந்தார்.

நாட்டின் சிங்கள அரசியல் தலைவர்கள் உட்பட சர்வதேச நாடுகளின் தலைவர்கள் சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளும் மற்றும் நாட்டின் அனைத்து இன மக்களும் பெரிதும் மதிக்கும் இலங்கையின் சிரேஷ்ட அரசியல் தலைவராவார். தனது மக்களின் தீர்வுக்காக இறுதிவரை போராடிய பெருந்தலைவரையே இலங்கை தமிழ்பேசும் சமூகம் இன்று இழந்து நிற்கின்றது.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் இலங்கை மக்கள், தமிழ் பேசும் மக்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அன்னாரது குடும்பத்தினர் அனைவரோடும் இணைந்து யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களாகிய நாமும் துயர் பகிர்கின்றோம்.- என்றுள்ளது.



# காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பாக சர்வதேசம் பொறுப்புடன் செயற்படவில்லை!

## போராட்டக்காரர்கள் குற்றச்சாட்டு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

இறுதிக் கட்டப் போரில், இலங்கையின் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த அல்லது சரணடைந்த பின்னர் காணாமல் போன தமது உறவினர்களுக்கு நாட்டில் நீதி கிடைக்கப்பெறவில்லை என தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வரும், இலங்கையில் மிக நீண்ட தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ்ப் பெண்கள், நீதிக்கான போராட்டத்தில் பயனுள்ள வகையில் பங்களிப்பு வழங்காமை குறித்து சர்வதேச சமூகத்துக்கு எதிராக தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஜுன் மாதத்தின் இறுதி வாரத்திலும் ஜுலை முதலாம் திகதியும் வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களில் நீதி மற்றும் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி எட்டு போராட்டங்களை முன்னெடுத்த பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச சமூகத்திடமே தாம் நீதியை கோருவதாக ஒரே குரலில் வலியுறுத்தியுள்ளனர்.

நீதிக்காகப் போராடும் தமிழ்த் தாய்மார்கள் இலங்கை அரசிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை என கடந்த ஜுன் 25 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டத் தலைவி கோகிலவாணி கதிர்காமநாதன் வலியுறுத்தினார்.

"எங்களது உறவுகள் எங்களுக்கு கிடைக்கும்வரை எங்களது போராட்டம் தொடரும். எங்கள் உயிர் எங்களுடன் இருக்கும் வரையில் எங்கள் போராட்டம் தொடரும். இலங்கை அரசாங்கத்திடம் நாங்கள் கொடுப்பனவுகளையோ உறவுகளையோ கேட்கவில்லை. சர்வதேசத்திடமே எங்கள் உறவுகளை கேட்டு நிற்கின்றோம். சர்வதேசம்தான் எங்களுக்கு எங்களது உறவுகளுக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜுன் மாதம் 26 ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, இலங்கை அரசுக்கு எதிரான போரில் தமது உறவுகளை அழித்தொழிக்க உதவிய சர்வதேச சமூகத்திடம் நீதி கோருவதாக குறிப்பிட்டார்.

### சர்வதேசம் அறியும்

"எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது? எங்களது உறவுகள் இருக்கின்றார்களா? இல்லையா? எங்கள் உறவுகளை கொண்டுச் சென்று என்ன செய்தார்கள்? அவர்களுக்கு தண்டனை வழங்கி எங்களுக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும். எங்களுக்கு சர்வதேசமே நீதியை பெற்றுத்தர வேண்டும்.

போராட்டத்தில் எங்களது உறவுகள் அழிக்கப்பட்டமைக்கும் அவர்கள்தான் அரசாங்கத்திற்கு உதவி செய்தார்கள். அவர்களிடம்தான் நீதியையும் கேட்கின்றோம். அவர்களை எங்கே வைத்திருக்கின்றார்கள் என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சனி, அவர்களின் 2,687 நாள்கள் தொடர் போராட்டத்தை நிறைவு செய்து கடந்த ஜுன் 30ஆம் திகதி கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

"எங்களுக்கான நீதியை சர்வதேசத்திடம் இருந்துதான் கேட்டிருக்கின்றோம். இலங்கை அரசு ஒரு போதும் நீதியை பெற்றுத்தராது. தரப்போறதும் கிடையாது. ஆகவே மனித உரிமைகளை நேசிக்கின்ற உறவுகள் இணைந்து எமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும். புலனாய்வாளர்களின் விசாரணைகளுக்கு மத்தியில்தான் போராடிக் கொண்டிருக்கின்றோம். புலம்பெயர் தேசத்தில் இருப்பவர்களும் விலைபோகாமல் ஒற்றுமையாக நின்று, நீதிக்கான இந்தப் போராட்டத்தை கையில் எடுக்க வேண்டும்."

அரசு தமது பிள்ளைகளின் தலைவிதியை வெளிப்படுத்தத் தவறிவிட்டது. வருடா வருடம் புதிய ஆணைக்குழுக்களை அமைத்து வருவதாகவும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயச்சந்திரா, ஜுன் 28 ஆம் திகதி மன்னாரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கி கருத்து வெளியிடுகையில் குறிப்பிட்டார்.

"14 வருடங்களில் 14 ஆணைக் குழுக்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. உண்மை ஒற்றுமை என்ற ஆணைக்குழு மன்னாருக்கும் வந்தது. உண்மை எங்களது நாட்டில் இருக்கின்றதோ தெரியவில்லை. ஒற்றுமை எங்கள் நாட்டில் இருக்கின்றதோ தெரியாது. அப்படி இருந்திருந்தால் தமிழ் இனத்துக்கு இவ்வாறானதொரு துன்ப துயரம் வந்திருக்காது. உங்களிடம் தந்த பிள்கைகள், குடும்பம் குடும்பமாக சரணடைந்த பிள்ளைகள், வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட பிள்ளைகளைத்தான் கேட்கின்றோம். இறந்த பிள்ளைகளை கேட்கவில்லை."

15 வருடங்களுக்கு முன்னர் படையினரிடம் சரணடைந்த தமது பிள்ளைகளைப் பார்க்காமலேயே அனைத்துத் தமிழ்த் தாய்மாரும் இறந்துவிடுவார்களோ? என வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட தலைவி சிவபாதம் இளங்கோதை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கண்ணீருடன் கேள்வி எழுப்பியிருந்தார்.

"மே 18 அன்று எங்கள் பிள்ளைகள் அனைவரும் சரணடைந்தார்கள். குடும்பம் குடும்பமாக சரணடைந்தார்கள். கொத்துக் கொத்தாக குண்டு மழையில் உயிரிழந்தவர்கள் போக எஞ்சியவர்கள், விசாரணை செய்து விட்டு விடுவோம் என்று பிரான்சிஸ் பாதருடன் 100 இற்கும் மேற்பட்ட குழந்தைகளும், பெற்றோரும் சரணடைந்தார்கள். வட்டுவாகலிலுமம்

தொடர்ச்சி▼

# காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பாக சர்வதேசம் பொறுப்புடன் செயற்படவில்லை!

தொடர்ச்சி▲

சரணடைய வைத்தார்கள் இராணுவம். விசாரணை செய்துவிட்டு விடுவோம் என்றார்கள். இன்று 15 வருடங்கள் ஆகிவிட்டது. எங்கள் பிள்ளைகளை மீட்கும் முன்னர் நாம் இறந்துவிடுவோமோ என்ற பயம் ஏற்பட்டுவிட்டது.”

ஜூன் 27ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திலும், ஜூன் 30ஆம் திகதி திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமலநாயகி அமலராஜ் தலைமையில் கடந்த ஜூன் மாதம் 24 ஆம் திகதி மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்டவர்களை கண்டறியக்கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் உறவினர்களால், நெருங்கிய உறவினர் ஒருவரைக்கூட கண்டுபிடிக்கத் தவறியுள்ள, 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் நிறுவப்பட்ட, காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகத்தின் செயற்பாடு கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

“இலங்கை அரசு ஓஎம்பி அலுவலகத்தை கொண்டுவந்து நட்டஈட்டை கொடுப்பதாக சொல்லி மக்களை ஏமாற்றி அந்த பைல்களை குளோஸ் பண்ணுவதற்கான செயற்பாடுகளை சரியான கள்ளத்தனமான வேலைகளை ஓஎம்பி அலுவலகத்தால் செய்து கொண்டுள்ளனர். நான் ஓஎம்பி அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை. எங்கோ இருந்து எங்களுடைய தரவுகளை எடுத்துக்கொண்டு உங்களது ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது உடனடியாக வந்து பதிவு செய்யுங்கள் என்று சொல்லி, இந்த அப்பாவித் தாய்மாரை மரண பதிவை எடுத்தால்தான் ஒரு உதவித் திட்டங்களும் கிடைக்கும் எனச் சொல்லி அவர்களுக்கு கட்டாயப்படுத்தி மரண பதிவுகளை வழங்கி கஷ்டப்படுத்தி ஏற்கனவே கஷ்டப்படும் தாய்மாரை மேலும் மேலும் மன உளைச்சலுக்கு உள்ளாக்குகிறார்கள். ஒரு பொய்யான ஓஎம்பி அலுவலகம் அல்லது உள்ளக பொறிமுறையை கொண்டுவந்து ஏமாற்றி கால இழுத்தடிப்பை இலங்கை அரசு செய்கிறது.”

பிள்ளைகளைத் தேடி வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் பல வருடங்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் தாய்மார்கள் பிள்ளைகளின் கதியை அறியாமலேயே இறுதி மூச்சை விடுவதாகவும், ஆனால் இளம் தலைமுறையினர் இந்தப் போராட்டத்தை தொடர்வார்கள் எனவும் அமலநாயகி அமலராஜா நம்பிக்கை வெளியிட்டார்.

“உறவுகளைத் தேடிக்கொண்டிருந்த 200 இற்கும் மேற்பட்ட எம்முடைய தாய்மாரை நாங்கள் இழந்துள்ளோம். எமது சாட்சியங்கள் அழிக்கப்படுகின்ற. கண்கண்ட சாட்சியங்கள் நாங்கள் இருகின்றோம். நாங்கள் இல்லாமல் போனால், இந்த கால இழுதடிப்பிற்கு காரணமே இதுதான். நாங்களும் இல்லாமல் போனால் குரல் கொடுக்க யாரும் இல்லை என்றே, இந்த இலங்கை அரசும், அதனுடன் சேர்ந்து செயற்படுபவர்களும் அவ்வாறு நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இளம் சந்ததி இதனை தொடர்ந்து கொண்டுபோகும்.”





# உத்தரபிரதேசத்தில் நேற்று 121 பேரைப் பலிகொண்ட ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சியில் நடந்தது என்ன?

**லக்னோ, ஜூலை 03**

உத்தரபிரதேசத்தில் ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சியில் 121 பேர் உயிரிழந்தமை தொடர்பான அதிர்ச்சித் தகவல்கள், விவரங்கள் வெளியாகியுள்ளன.





உத்தரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் புல்ராய் என்ற கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில் நேற்று இந்து மத ஆன்மிக சொற்பொழிவு நடைபெற்றது. இந்த ஆன்மிக சொற்பொழிவை பாபா நாராயன் ஹரி என்ற சாஹர் விஷ்வஹரி போலே பாபா சாமியார் நடத்தினார்.

போலே பாபா சாமியார், ஹத்ராஸ் மட்டுமின்றி அதன் சுற்றுவட்டார மாவட்டங்களிலும் மிகவும் பிரபலமானவர் ஆவார். இதனால், அவரது ஆன்மிக சொற்பொழிவைக் கேட்க சுற்றுவட்டாரங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் வந்தனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கியே 121 பேர் உயிரிழந்தனர்.

சாமியார் போலே பாபாவின் ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சியில் பங்கேற்க மாவட்ட நிர்வாகம் 80 ஆயிரம் பேருக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஆயினும், சாமியார் போலே பாபாவின் சொற்பொழிவு நிகழ்ச்சியைஜ் காண 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குவிந்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சி நிறைவடைந்த உடன் போலே பாபா நிகழ்ச்சி நடைபெற்ற பகுதியில் இருந்து புறப்பட்டுள்ளார். அப்போது அவரை பார்க்க பக்தர்கள் குவிந்தனர். அவரைப் பார்க்க முயன்ற பக்தர்கள் அவரை நோக்கி முன்னேறியுள்ளனர்.

ஆன்மிக சொற்பொழிவு நிறைவடைந்த உடன் போலே பாபா காரில் புறப்பட்டுள்ளார். அப்போது அவரது காரை பின் தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் ஓடியுள்ளனர்.

சாமியார் ஆன்மிக சொற்பொழிவை நிறைவுசெய்தபின் புறப்பட்டபோது அவரது காலடி மண்ணை எடுக்க பக்தர்கள் முயற்சித்துள்ளனர். அவர் நடந்து சென்றபாதையில் காலடி மண்ணை எடுக்க ஆயிரக்கணக்கானோர் குனிந்துள்ளனர். அப்போது ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர்.

இதனால், கூட்டநெரிசல் ஏற்பட்டுள்ளது. மேலும், ஒருவர் மீது ஒருவர் விழுந்ததால் பலருக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது.

நிகழ்ச்சி நடைபெற்ற பகுதிக்கு அருகே சாக்கடையும் ஓடியுள்ளது. நிகழ்ச்சி முடிந்ததும் பக்தர்கள் வேக வேகமாக வெளியேற முயற்சித்தபோது சாக்கடைக்குள்ளும் விழுந்துள்ளனர்.

சாமியாரின் காலடி மண்ணை எடுக்க முயற்சி, ஒருவர் மீது ஒருவர் விழுந்ததால், வெளியேற முயற்சித்தபோது கூட்டநெரிசல், சாமியாரை பார்க்க பின் தொடர்ந்து ஓடியபோது நெரிசல் உள்ளிட்ட க ரணங்களால் பலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. இதில் பலரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் இதுவரை 121 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் பெரும்பாலானோர் பெண்கள் என்பது தெரியவந்துள்ளது. உயிரிழந்த 121 பேரில் 108 பேர் பெண்கள் ஆவர். 7 குழந்தைகளும் உயிரிழந்துள்ளன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சியை நடத்திய சாமியார் போலே பாபா தலைமறைவாகியுள்ளார். அவரை தீவிரமாக தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

121 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் தேவ்பிரகாஷ் மதுகர் உள்பட பலர் மீது பொலிஸர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.








# நடுவானத்தில் தாறுமாறாகக் குலுங்கிய விமானத்தில் 30 பயணிகளுக்குக் காயம்

**பிரேசிலியா, ஜூலை 03**

வானில் பறந்து கொண்டிருந்த போது திடீரெனத் தாறுமாறாகக் குலுங்கிய விமானத்தினால் முப்பது பயணிகள் காயமடைந்தனர்.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் விமான நிலையத்தில் இருந்து தென் அமெரிக்க நாடான உருகுவேக்கு விமானம் ஒன்று புறப்பட்டது. ஏர் ஐரோப்பா நிறுவனத்துக்கு சொந்தமான அந்த விமானத்தில் 325 பயணிகள் இருந்தனர்.

இந்தநிலையில் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது விமானம் திடீரெனத் தாறுமாறாகக் குலுங்கியது. இதில் சில பயணிகள் முன்னால் உள்ள இருக்கைகள் மீது மோதினர். இதனால் பயணிகள் பயத்தில் கத்தி கூச்சலிட்டனர்.

இதில் விமானத்தின் சில பாகங்கள் உடைந்து தொங்கிக்கொண்டிருந்தன. இதனால் விமானி கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டார். அப்போது பிரேசிலில் தரையிறங்க விமானிக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதன்பேரில் பிரேசிலில் உள்ள நடால் விமான நிலையத்தில் விமானம் அவசரமாகத் தரையிறங்கியது. அங்கு தயாராக இருந்த மீட்பு குழுவினர் விமானத்தில் இருந்த பயணிகளை அவசர அவசரமாக வெளியேற்றினர்.

மேலும் படுகாயம் அடைந்த 30 பேர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். இதனையடுத்து வேறு விமானம் மூலம் பயணிகள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தால் விமான நிலையத்தில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. எனினும் விமானியின் சாமர்த்தியத்தால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

இதற்கிடையே பயணிகள் சிலர் விமானம் குலுங்கியபோது தங்களது செல்போனில் வீடியோ எடுத்தனர். அதில் விமானத்தின் சில பாகங்கள் உடைந்து தொங்குவதும், ஒரு பயணி தலைக்கு மேல் இருக்கும் கபார்ட்மெண்ட் பகுதியில் சிக்கி இருந்த காட்சிகளும் சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவியது.

# கஜகஸ்தானில் களைகட்டியது ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு

கஜகஸ்தான் நாட்டின் அஸ்டானா நகரில் வைத்து இன்றும் நாளையும் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ள ரஷ்ய அதிபர் புடின் மற்றும் சீன அதிபர் ஜி ஜின் பிங் தற்போது கஜகஸ்தான் நாட்டுக்கு சென்றடைந்துள்ளனர். இந்த மாநாடு அமெரிக்க உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக இருக்கும் நாடுகளின் வலுவான கூட்டமைப்பைக் கட்டமைக்கும் முயற்சியாக அமைந்துள்ளது.



ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடானது கடந்த 2001 ஆம் ஆண்டு ரஷ்யா மற்றும் சீனாவின் முன்முயற்சியால் மத்திய ஆசிய நாடுகளின் பாதுகாப்பைக் குறித்து ஆலோசித்து உறுதிசெய்ய ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். இந்தியா, பாகிஸ்தான், ஈரான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ளன. மேலும் துருக்கி, சவுதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளும் இந்த ஷாங்காய் கூட்டமைப்பு ஆலோசனைகளில் தொடர்ந்து பங்கேற்று வருகின்றன.

இந்த வருட மாநாட்டில் கூட்டமைப்பில் உள்ள மற்றைய நாடுகளின் அதிபர்கள் தலைவர்கள் பங்கேற்கும் நிலையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கர் மாநாட்டில் பங்கேற்க கஜகஸ்தான் சென்றுள்ளார்.

உக்ரைன் மீது போர் தொடுத்ததால் மேற்குலகத்தால் பெருளாதார தடைகளை எதிர்கொண்ட ரஷ்யா தனியாக இல்லை என்று அவர்களுக்கு காண்பிக்கும் விதமாக இந்த மாநாட்டை ரஷ்ய அதிபர் புடின் முன்னெடுத்துச் செல்வார் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் சீன அதிபர் ஜீ ஜின்பிங்கும் இந்த மாநாட்டை மத்திய ஆசியாவில் சீனாவை பிரதானப்படுத்தும் வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்வார் என்று தெரிகிறது.

பக்கங்கள் 06

கனடா முரசு

புதன்கிழமை 03/07/2024


## யூத எதிர்ப்புக் கருத்துக்களில் ஆசிரியர்கள் சம்மேளனமாம்!

**பிரிட்டிஷ் கொலம்பியாவில் குற்றச்சாட்டு**

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 3

யூத எதிர்ப்புத் தொடர்பில் பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஆசிரியர்கள் சம்மேளனத்தின் மீது சில யூத ஆசிரியர்கள்

C2



# ட்ரூடோவின் கோடை நிகழ்வுகளில் கல்கரி கூடல் இம்முறை இல்லை!

**ஒன்ராரியோ, ஜூலை 3**

**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் கோடை கால நிகழ்வுகளில் கல்கரி நெரிசல் கூட்ட நிகழ்வு இம்முறை உள்ளடங்காது எனத் தெரிவிக் கப்படுகின்றது.**

**சுமார் 10 நாள்கள் நடைபெறும் இந்த நிகழ்வு அரசியல்வாதிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள் ளும் நிகழ்வாக பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது.**

கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளைத் தவிர்த்து பிரதமராக பொறுப்பேற்றது முதல் ஜஸ்டின் ட்ரூடோ இந்த நிகழ்வில் வருடாந்தம் கலந்து கொண்டிருந்தார்.

எனினும், இந்த வருடம் அவர் கலந்து கொள்ளமாட்டார் என்பதனை பிரதமரின் அலுவலகம் உறுதி செய:துள்ளது.

ஆனாலும், இதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

ஜூலை 5ஆம் திகதி ஆரம்பிக்கும் இந்தக் கொண்டாட்டம் ஜூலை 14ஆம் திகதி வரை நடைபெறும்.

# மெக்சிகோவில் இரு சிறு பிள்ளைகளை கைவிட்டுச் சென்ற கனடா யுவதி கைது!

ஒன்ராரியோ, ஜூலை 3

மெக்சிகோவில் சுற்றுலாத் தள மொன்றில் தனது பிள்ளைகளைக் கைவிட்டுச் சென்ற கனடிய தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடியப் பெண் ஒருவர், தனது இரண்டு பெண் குழந்தைகளை கன் குன் சுற்றுலாத் தளத்தில் விட்டுச் சென்றார் எனக் குற்றம் சாட்டப்பட் டுள்ளது.

மூன்று வயதுக்குட்பட்ட இரு சிறுமி களையும் இந்தப் பெண், சுற்றுலாப் பயணிகள் அதிகம் கூடும் இடத்தில் கைவிட்டுச் சென்றார் எனக் கூறப்படு கின்றது.



குழந்தைகளை தொடர்ந்து பராம ரிக்க முடியாது என்பதால் சுற்றுலா தளத்தில்வர்களைக் கைவிட்டுச் சென்றார் என அந்தப் பெண் பொலி ஸாரிடம் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நிகழ்ந்த இந்த சம்பவத்தில் மீட்கப்பட்ட குழந்தைகள் இருவரும் தற்காலிக உதவி இல்ல மொன்றில் பராமரிப்பில் வைக்கப்பட் டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழந்தைகளை மீண்டும் கனடாவுக்கு அழைத்து வருவதற்கு அவர்களின் கனடிய உறவினர்களை அதிகாரிகள் தொடர்பு கொண்டுள்ளனர்.

இதில் கைதான தாயின் வயது, பெயர், ஊர் ஆகிய விவரங்கள் குழந் தைகளின் தனியுரிமை காரணமாக வெளியிடப்படவில்லை.

# கனடியத் தமிழர் பேரவையின் புதிய பணிப்பாளர் சபையினர்




ஒன்ராறியோ, ஜூலை 3

கனடியத் தமிழர் பேரவை புதிய பணிப்பாளர் சபையை அறிவித்துள்ளது.

புதிய தலைவர், பணிப்பாளர் சபை நியமனத்தை கனடியத் தமிழர் பேரவை அறிவித்துள்ளது.

இந்த நியமனம் தமிழ் சமூகத்தின் நலன்களுக்கான பணியில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை குறிக்கிறது என கனடியத் தமிழர் பேரவை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கனடியத் தமிழர் பேரவையின் புதிய தலைவராக குமார் ரட்னம் அறிவிக்கப்பட்டுள்ளார்.

கனடியத் தமிழர் பேரவையின் புதிய பணிப்பாளர் சபை வருமாறு:-

- தலைவர் :- குமார் ரட்ணம்
- உப தலைவர் :- வைத்தியர் ஷான் ஏ. சண்முகவடிவேல்
- செயலாளர. :- பிரகல்
- பொருளாளர் :- டில்ஷான் நவரத்னராஜா
- பணிப்பாளர்கள் குழு :-
  நாதன் வீரசிங்கம்
  சகீலா சங்கர்
  ரவி பொன்னம்பலம்

தமிழ் கனடிய சமூகத்தின் வளர்ச்சியடைந்து வரும் தேவைகளுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக இந்த ஆண்டு தொடர்ச்சியான பொது ஆலோசனைகளை இந்த பணிப்பாளர் சபை ஆரம்பிக்கும் என கனடியத் தமிழர் பேரவை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# கனடா தினத்தில் இலவச உணவு வழங்கல் மென்டரின் உணவகங்களில் ஜனக்கூட்டம்

ஒன்ராறியோ, ஜூலை 3

கனடா தினத்தை முன்னிட்டு கனடாவில் அமைந்துள்ள மென்டரின் உணவகங்கள் இலவச புஃபேக்களை வழங்கியுள்ள நிலையில், அந்த உணவகங்களில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

இலவச புஃபே மதியம் முதல் இரவு 8 மணி வரை வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. மென்டரின் உணவகங்களில் 100க்கும் மேற்பட்ட உணவு வகைகள் உள்ளன.

குளிர்பானங்கள், தேநீர், காபி உட்பட அனைத்து உணவுகளும் அங்கு காணப்படுகின்றன.

ஒன்ராறியோவில் 30 இடங்களில் மென்டரின் உணவகங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




உணவு வேளைக்கு முன்பிருந்த மக்கள் வரிசையில் காத்திருந்தமையால் சில உணவகங்களில் கூட்டத்தை சமாளிக்க முடியாதிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

வழமையாக முன்பதிவுகளுடன் உணவகங்களில் உணவு வழங்கும் வழக்கம் கொண்ட மென்டரின் உணவகம், கனடா தினத்தில் மாத்திரம் முன்பதிவு ஏற்றுக்கொள்ளாது உணவு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## யூத எதிர்ப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு செய்துள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஆசிரியர்கள் சம்மேளனமானது யூத எதிர்ப்பு கருத்துக்களில் ஈடுபடுவதாகவும், ஊக்குவிப்பதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஆசிரியர்கள் சம்மேளனமானது யூத கருத்துக்கள் மற்றும் குரல்களை அழிக்க முயற்சிப்பதாக இந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.






# ரொறன்ரோவில் டாக்ஸி சாரதி மீது கத்திக் குத்து; சந்தேகநபர் கைது!

ரொறன்ரோவில் டாக்ஸி சாரதி ஒருவர் மீது கத்தி குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

லோவர் செர்ப்ரோன் வீதியில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதலை மேற்கொண்ட நபர் தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திங்கள் மாலை 7.50 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பயணிக்கும் சாரதிக்கும் இடையிலான வாய்த் தர்க்கமே கத்திக் குத்தில் முடிந்திருக்கின்றது.

25 முதல் 30 வயது மதிக்கத் தக்க கறுப்பின நபர் ஒருவரே இவ்வாறு தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என முதலில் பொலிஸ் அறிவித்தது.

எனினும் அடுத்தநாளான நேற்று செவ்வாய்கிழமை காலை 23 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என அறிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வொஷிங்டனில் நேட்டோ மாநாடு; ட்ரூடோவும் கலந்துகொள்கின்றார்



ஒன்ராரியோ, ஜூலை 3

அமெரிக்காவில் அடுத்த வாரம் நடைபெறும் நேட்டோ நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கலந்துகொள்ளவுள் ளார்.

32 நேட்டோ நாடுகள் கூட்டணி, 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாட உள்ளது. .

வொஷிங்டன் நகரில் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கலந்து கொள்ளவுள்ளார்.

உக்ரைன் யுத்தம் இந்த ஆண்டு மீண்டும் இந்த மாநாட்டின் மையப் புள்ளியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனடா தனது செலவின இலக்குகளை சந்திக்கும் திட்டத்தை முன் வைக்கவில்லை என்பதனால் இந்த மாநாட்டில் நட்பு நாடுகளின் அழுத்தத்தையும் கனடா எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# லிபரல் எம்.பி. கென் மெக்டொனால்ட் இனி பொதுத் தேர்தலில் போட்டியிடார்

ஒன்ராரியோ, ஜூலை 3
மத்திய அரசாங்கத்தின் கார்பன் வரி தொடர்பில் தமது கட்சியை எதிர்த்த லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் கென் மெக்டொனால்ட், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று கூறியுள்ளார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சியினர் பெரும்பான்மை அரசாங்கத்தை வென்ற 2015ஆம் ஆண்டு முதல் நியூஃபவுண்ட்லேண்ட் மற்றும் லாப்ரடோரில் அவலோனின் தேர்தல் தொகுதியை மெக்டொனால்ட் பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார்.

அவர் உள்ளூர் வானொலி நிலையம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்த போது, தமது குடும்பத்துடன் நேரத்தை செலவிடுவதற்காக இந்த முடிவினை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் நடுப்பகுதியில் இது தொடர்பில் ட்ரூடோவிடம் தாம் நேரில் தெரிவித்தார் என மெக்டொனால்ட் குறிப்பிட்டுள்ளார்.

# பதின்ம வயதுடையவரை சுட்ட 84 வயதுக் கிழவர்




எட்மண்ட்டுக்கு வடக்குப் பகுதியைச் சேர்ந்த 84 வயது வயோதிபர் ஒருவர் பதின்ம வயதுடைய ஒருவரைச் சுட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமையன்று செயின்ட் ஆல்பர்ட் அருகே ரேஞ்ச் ரோடு 255 இல் உள்ள ஒரு கிராமப்புற ஆதனத்தில் 15 மற்றும் 16 வயதுடைய இரண்டு பதின்ம வயதினரை எதிர்கொண்ட இந்நபர் அவர்களில் 16 வயதுடையவரைச் சுட்டிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதான 84 வயதுடைய ஜிம் ப்ரெகின் மீது கடுமையான தாக்குதல், குற்றச் செயல்களில் துப்பாக்கியைப் பயன்படுத்துதல், ஆபத்தான நோக்கத்திற்காக ஆயுதம் வைத்திருந்தமை மற்றும் வேண்டுமென்றே பொறுப்பற்ற முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. காவலில் வைக்கப்பட்ட அவர் நாளை ஜூலை 4 ஆம் திகது மோரின் வில்லில் நீதிமன்றில் நிறுத்தப்பட விருக்கின்றார்.

பாதிக்கப்பட்டவரின் நிலை குறித்து தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை.




# டொரான்டோ பல்கலை கூடார முகாம்கள் இன்று மாலைக்குள் அகற்றுமாறு உத்தரவு

ஒன்ராரியோ, ஜூலை 3

டொரான்டோ பல்கலைக்கழகம் அதன் நகர வளாகத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றிய பலஸ்தீனியர்களுக்கு ஆதரவான போராட்ட முகாமால் ஈடுசெய்ய முடியாத பாதிப்பை சந்தித்துள்ளது என்று குறிப்பிட்டு ஒன்ராறியோ நீதிபதி ஒருவர் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் முகாம்களை அகற்ற உத்தரவிட்டார்.

நேற்று (ஜூலை 2) பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு போராட்டக்காரர்களை ஜூலை 3ஆம் திகதி மாலை 6 மணிக்குள் கூடாரங்கள் மற்றும் கட்டமைப்புகளை அகற்ற உத்தரவிடுகிறது.

உத்தரவைப் பற்றி அறிந்த மற்றும் அதை மீறும் எவரையும் கைது செய்து நீக்குவதற்கான அதிகாரத்தையும் இது பொலிஸாருக்கு வழங்குகிறது.

ஒன்ராறியோ உயர் நீதிமன்ற நீதிபதி மார்கஸ் கோஹ்னென் தனது தீர்ப்பில், முகாம் பங்கேற்பாளர்கள் வன்முறையாகவோ அல்லது யூத விரோதிகளாகவோ இருந்ததற்கான ஆதாரம் இல்லை என்றாலும், கிங்ஸ் காலேஜ் சர்க்கிள் எனப்படும் பகுதியில் என்ன நடக்கிறது என்பதைக் கட்டுப்படுத்தும் பல்கலைக்கழகத்தின் திறனை இந்த ஆர்ப்பாட்டம் பறித்து விட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கனேடியர்கள் திவாலாவது அதிகரிப்பதாக அறிக்கை

கனடாவின் வாழ்க்கைச் செலவு நெருக்கடி கனேடியர்களை மேலும் கடனில் தள்ளுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது திவால் விகிதங்களை முந்தைய ஆண்டுகளில் மிக உயர்ந்த நிலைக்குத் தள்ளியது. இது கனடியன் அசோசியேஷன் ஆஃப் திவால் மற்றும் மறுசீரமைப்பு வல்லுநர்கள் (CAIRP) அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை விட மே மாதத்தில் நுகர்வோர் திவால்நிலைகள் 11.3 சதவீதம் அதிகரித்துள்ளதாக திவால் நிலை கண்காணிப்பாளர் அலுவலகம் (OSB) தெரிவித்துள்ளது. தனிநபர் தாக்கல் செய்தவர்களின் எண்ணிக்கை 12,195 ஆக இருந்தது. தொற்றுநோய்க்கு முன், அக்டோபர் 2019க்குப் பிறகு இதுவே அதிகபட்ச மாதாந்திர விகிதமாகும்.

மே 2024 இல் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில், கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், நுகர்வோர் திவாலான நிலை




தாக்கல்களில் 17.9 சதவீதம் அதிகரித்துள்ளது. மே 2024 இல் அதிக திவால் விகிதத்தைக் கொண்ட மாகாணமாக சஸ்காட்செவன் இருந்தது. 18.8 சதவீதம் அதிகரித்து 347 தினசரி தாக்கல். ஒன்டாரியோ மற்றும் கியூபெக் 16 சதவீத விகித அதிகரிப்புடன் இரண்டாவது இடத்தில் உள்ளன.

மே மாதத்தில் 530 கனேடிய வணிக திவால்கள் பதிவு செய்யப்பட்டன CAIRP கூறுகிறது. கடந்த ஆண்டு இதே காலத்தை விட 41.7 சதவீதம் அதிகமாகும்.



# டர்ஹாம் பிரதேசத்தில் பஸ் கட்டணம் உயர்வு

Durham Region Transit (DRT) ஜூலை 1 முதல் பஸ் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. ஏஜென்சியின் கூற்றுப்படி, பஸ் கட்டண உயர்வு, சேவையை மேம்படுத்துதல், பேட்டரி மின்சார வாகனங்களுக்கு மாறுதல் மற்றும் பயணிகளுக்கு புதிய வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இனிமேல், பிரஸ்ஸோ ஃபேர் கார்டு அல்லது இ-டிக்கெட்டைப் பயன்படுத்துபவர்களுக்கான பஸ் கட்டணம் $3.35ல் இருந்து $3.60 ஆக அதிகரித்துள்ளது. ரொக்கமாகவோ அல்லது திறந்த கட்டணமாகவோ செலுத்தும் பெரியவர்களுக்கான கட்டணம் $4.35ல் இருந்து $4.60 ஆக அதிகரிக்கும் என்று Durham Region Transit செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மாதாந்திர பிரஸ்டோ பாஸ்களில் $9 அதிகரிப்பும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது மாதாந்திர Presto பாஸ் விகிதத்தை $29.60 ஆகக் கொண்டுவருகிறது. இதற்கிடையில், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச பயணம் தொடரும்.

மேலும் தகவலுக்கு Durham Region Transit இணையத் தளத்தைப் பார்வையிடலாம்.



# உலகில் வாழத் தகுதியான நகரங்களின் பட்டியலில் கால்கரி 5 ஆவது இடத்தில்!

## டொராண்டோவுக்கு 12 ஆவது இடம்

உலகில் வாழ்வதற்கு சிறந்த நகரங்களின் பட்டியலில் கனடாவின் கால்கரி ஐந்தாவது இடத்தில் உள்ளது. எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட் வெளியிட்ட பட்டியலில் கால்கரி முதல் ஐந்து இடங்களைப் பிடித்தது.

2023 இல் ஏழாவது இடத்திலிருந்து கால்கரி இந்த ஆண்டு ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியது. இந்த அங்கீகாரம் சுகாதாரம், அதிநவீன உள்கட்டமைப்பு மற்றும் கல்வி ஆகியவற்றில் அது சிறந்து விளங்குவதால் கிடைத்தது. உலகளாவிய வாழ்வாதாரக் குறியீட்டில் கால்கேரி 96.8 மதிப்பெண்களைப் பெற்றது. 173 நகரங்கள் பகுப்பாய்வு செய்யப் பட்டன. கனடாவின் டொராண்டோ நகரம் பன்னிரண்டாவது இடத்தில் உள்ளது